**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 83/2018 Date:08.04.2025**

**(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ**
குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா-ஆ.1 ஆவணம் எனக்கு யார் கொடுத்தது என்றால் பெனான்சிஸ் பெல்லார்மின் என்பவர் கொடுத்தார். மேற்சொன்ன வா.சா.ஆ.1 ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் வா.சா.ஆ-1 ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 450/8 என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் நகலை இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் எடுத்தால் சர்வே எண் 450/8 என்று குறிப்பிட்டிருக்கும் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம், ஆனது இரணியல் சார்வதிவாளர் அலுவலகத்தில் எடுத்த ஆவண எண் 2058/2003-ற்கான சான்றிட்ட நகல் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவண எண்-2058/2003-ன் உண்மையான சர்வே எண்ணை மறைத்து போலியாக சர்வே எண் 450/8 என குறிப்பிட்டு ஆவணம் உருவாக்கியுள்ள போலி ஆவணத்தை வா.சா.ஆ-1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம் கொடுத்த நபர் இவ்வழக்கில் கட்சியாக இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தரப்பினர்களாக இருக்கக்கூடிய பிரதிவாதிகள் எனக்கு எந்தவித பணமும் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல, தரவேண்டியுள்ளது. நான் போலி ஆவணத்தின் அடிப்படையில் உருவாக்கிய வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ-2 ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ**
<u>குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**</u>

3. இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகள் எதிர்கோரிக்கை மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்